**SC NO.27/2020 Date:23.01.2025**

கூடுதல் மாவட்ட **6** நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **),** காஞ்சிபுரம் **(**பக்கம் **)**

சாட்சியாகிய திரு**.** விஸ்வநாதன் என்ற **Pw1** நபரின் வாக்குமூலம் **(1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது**.**

பெயர் **-** திரு**.** விஸ்வநாதன்

த**/**பெ**, -** திரு**.**துரைசாமி

வயது **- 30**

தொழில் **-** தனியார் நிறுவன வேலை

முதல் விசாரணை**:**

நான் தற்போது கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு கிராமத்தில் எஸ்வி தெருவில் வசித்து வருகிறேன்**.** நான் தற்போது கோயம்புத்தூரில் டைனவா இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் பணி செய்கிறேன்**.** இந்த வழக்கில் இறந்த சபரிநாதன் எனது அண்ணன்**.** யுவராஜ் என்பவரை எனக்கு தெரியும்**.** ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்**. 14.04.2019** தமிழ் புத்தாண்டு அன்று மாலை எனது அண்ணன் சபரிநாதன் சுங்குவார் சத்திரத்தில் வாடகைக்கு ஒரு கட்டிடத்தில் இருந்துவந்தார்**.** அதே கட்டிடத்தில் அவருடன் வேலை செய்யும் டிரைவர் செல்வம் என்பவர் கீழே தங்கியிருந்தார்**.** அன்றைய தேதியில் கீழே தங்கியிருந்த செல்வத்திற்கும் அவருடன் வேலை செய்தவருக்கும் அடிதடி தகராறு நடந்துள்ளது**.** எனது அண்ணன் அதை பார்த்து டிரைவர் செல்வத்திற்காக தடுக்க சென்றார்**.** தடுக்க போகும்போது செல்வம் கீழே விழுந்துள்ளார்**.** அவர் கீழே விழுந்ததால் செல்வத்திற்கு மூக்கில் அடிபட்டு இருந்தது**.** திருபெரும்புதூர் ஒரு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளித்துள்ளார்**.** அதன் பிறகு செல்வத்தின் உறவினர்கள் யுவராஜ் மற்றும் ராஜ்குமார் அங்கு வந்து அவரை சவிதா தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்துள்ளார்கள்**.** ராஜ்குமாரும் யுவராஜியும் செல்வத்தின் சிகிச்சைக்கான பணத்தை கேட்டு என் அண்ணனை மிரட்டியுள்ளனர்**.** அதற்காக அவர் காசும் கொடுத்துள்ளார்**. 27.4.2019** அன்று மாலை சுமார் **6** மணியளவில் எனது அண்ணன் வேலை செய்யும் சுங்கவர் சத்திரம் பாக்ஸ்கான் நிறுவனத்தில் வெங்கடேசன் மற்றும் ராஜ்குமார் ஆகிய இருவரும் ஒரு பைக்கில் வந்து செல்வத்தின் மருத்துவத்திற்கு பணம் வேண்டும் என்று கூறி அவரை பைக்கில் ஏற்றி சென்றுவிட்டார்கள்**.** பைக்கில் செல்லும்போது வெங்கடேசனும் ராஜ்குமாரும் என் அண்ணனை பணம் கேட்டு மிரட்டியுள்ளார்கள்**.** அதனால் என் அண்ணன் பயந்து என் அண்ணனுக்கு வேலையும் ரூமும் ஏற்பாடு செய்து கொடுத்த பூபதி என்பவரிடம் போன் செய்து பணம் கேட்டு என்னை பைக்கில் கூட்டி சென்றார்கள் என்னை காப்பற்றுங்கள் என்று சொல்லியுள்ளார்**.** அந்த நேரத்தில் பூபதி எனக்கு போன் செய்து நான் சிப்காட் மாம்பாக்கத்தில் உள்ள விசன் நிறுவனத்தில் பணி செய்யும் இடத்திற்கு வரும்படி தனது

போனில் தகவல் கொடுத்தார். பின்பு நானும் எனது நண்பர் ஆனந்த் என்பவரும் பைக்கை எடுத்துக்கொண்டு என் அண்ணன் வேலை செய்யும் பாக்ஸ்கான் நிறுவனத்திற்கு சென்றோம். அங்கு எனது அண்ணனுடைய நண்பர்களான ராஜேஷ் என்பவருக்கு போன் செய்தேன். அவர்கள் என் அண்ணனை ராஜ்குமாரும் வெங்கடேசும் ஒரு பைக்கில் ஏற்றிவிட்டு சென்றதாக சொன்னார்கள். அதன் பிறகு அரைமணி நேரமாக என் அண்ணனை தேடி சுங்குவார் சத்திரம் திருபெரும்புதூர் பகுதிகளில் தேடினோம். பின்பு மாம்பாக்கம் அருகில் குவாரி அருகில் மாலை **6.30** மணியளவில் அங்கு விசாரித்தபோது வழியில் வந்த ஒரு நபர் அங்கு யாரையோ ஒருவரை வெட்டி கொலை செய்து போட்டுள்ளதாக என்னிடம் சொன்னார். குவாரியிலிருந்து ஒரு அரைகிலோமிட்டர் தூரத்தில் சென்று பார்த்தபோது என் அண்ணனுக்கு நெற்றி கை, கால், மூக்கு ஆகிய இடங்களில் வெட்டு காயம் பட்டு இறந்து கிடந்தார். பின்பு போலிசாரிடம் நான் புகார் கொடுத்தேன். திருபெரும்புதூர் காவல்நிலையத்திலிருந்து போலிசார் அங்கு வந்தார்கள். செல்வம் சண்டைபோடும்போது என் அண்ணன் அவரை காப்பாற்ற சென்றுள்ளார் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று அவரை காப்பாற்ற செலவு செய்துள்ளார் **2** நாட்கள் அவருக்கு சாப்பாடு அவர்தான் வாங்கி கொடுத்தார் செல்வம் என்பவர் சிகிச்சையில் கிட்னி பழுதடைந்து இருந்ததால் அவர் இறந்துள்ளார் என்று தெரியவந்தது. என் அண்ணனால்தான் அவர் இறந்துவிட்டார் என்று தவறாக நினைத்து ராஜ்குமார் மற்றும் வெங்கடேசன் என் அண்ணனை கொலை செய்தார்கள். எனக்கு தமிழ் எழுத தெரியாது பூபதி என்பவரிடம் சொல்லி அவர் எழுதி எனக்கு படித்து காண்பித்து அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் இறந்த நபர் எனது உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். அன்றைய தினம் **6.45** மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். சம்பவ இடத்தில்தான் புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்துதான் வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினம் இரவு **8** மணியளவில் நானும் பூபதியும் காவல்நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்தோம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இன்னொருமுறைசம்பவம் நடந்த **5,6** மாதம் கழித்து திருபெரும்புதூர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள். **14.4.2019** அன்று என் அண்ணன் தங்கியிருந்த குடியிருப்பில் நடந்த சம்பவத்திற்கு புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட செல்வத்தை என் அண்ணன் திருபெரும்புதூர் மருத்துவமனையில் சேர்த்ததற்கான ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சவிதா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல. ராஜ்குமாரும், யுவராஜியும் என் அண்ணனிடம் பணம் கேட்டி மிரட்டியதற்காக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது அண்ணனின் செல்போன் எண்ணிலிருந்து பூபதி என்பவருக்கு போன் செய்த விபரம் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பூபதி என்பவரின் போனிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது என்று போலிசார் விசாரணையில் ஆவணம் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை போலிசாரிடம் போன் செய்த விபரம் சொல்லியுள்ளேன். என் அண்ணன் என்னுடைய கைபேசிக்கு நேரடியாக போன் செய்தார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜ்குமாரும்

வெங்கடேசனும் என் அண்ணனை வலுகட்டாயமாக இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்ற விபரத்தை நான் எனது புகாரில் செல்லியிருக்கிறேன். அவ்வாறு விவரத்தை நான் கொடுத்த புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சபரிநாதன் பூபதி செல்போனிற்கு தகவல் சொல்லி பூபதி என்னுடைய சொல்போனுக்கு தகவல் சொன்னபோது நான் காவல்நிலையத்திற்கு சென்று எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் எனது நண்பர் ஆனந்த் என்பவரும் பாக்ஸ்கான் நிறுவனத்திற்கு சென்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் பாக்ஸ்கான் நிறுவனத்திற்கு சென்றாதாக சொன்னோம் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. பாக்ஸ்கான் நிறுவனத்திலிந்து எனது அண்ணனை வெங்கடேசனும், ராஜ்குமாரும் வலுகட்டாயமாக அழைத்து சென்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ராஜ்குமாரும் வெங்கடேசனும் எனது அண்ணனை வலுகட்டாயமாக அழைத்து சென்ற விபரத்தை புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட செல்வத்திற்கு சாப்பாடு வாங்கி கொடுத்த விபரத்தை போலிசார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ராஜ்குமாரும் யுவராஜியும் என் அண்ணனை பணம் கேட்டு மிரட்டியதை நான் நேரடியாக பார்க்கவில்லை. ராஜ்குமாரும் வெங்கடேசனும் என் அண்ணனை இரு சக்கரவாகனத்தில் அழைத்து சென்றதை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது அண்ணன் எந்த வகையில் இறக்கப்பட்டார் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. பூபதிக்கு எழுத படிக்க தெரியாது நான் சொல்ல பூபதி எழுதவில்லை என்றும் புகாரனது திருபெரும்புதூர் ஆய்வாளரால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**